*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை*

*17 12 2025* **WEDNESDAY** *06 30* **PM**

***வணக்கம்-மாநிலச்செய்திகள்***

***<u>தலைப்புச் செய்திகள்</u>***

*1. எத்தியோப்பியாவில் தாம் மேற்கொண்ட அரசுமுறைப் பயணம் ஆக்கபூர்வமாக அமைந்ததாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.*
*2. அதிநவீன வசதிகளுடன் கூடிய ஆம்புலன்ஸ் வாகனங்களை மாநிலங்களுக்கு வழங்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.*
*3. கல்வியில் தமிழகம் சிறந்து விளங்குவதாக மாநில அரசு கூறியுள்ளது.*
*4. மணல் மற்றும் கனிமவளக் கொள்ளையை தடுப்பது சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களின் பொறுப்பு என்று சென்னை உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.*
*5. உலக கோப்பை ரோல் பால் சாம்பியன் போட்டியில் இந்தியா ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

**>>>>>><<<<<<**

*எத்தியோப்பியாவில் தாம் மேற்கொண்ட அரசுமுறைப் பயணம் ஆக்கபூர்வமாக அமைந்ததாக பிரதமர் திரு. நரேந்திரமோடி கூறியுள்ளார்.*

*எத்தியோப்பியாவில் அரசுமுறைப் பயணத்தை முடித்துக் கொண்டு ஓமன் புறப்படும் முன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.*

*அந்நாட்டு பிரதமர் டாக்டர் Abiy Ahmed Ali -யுடன் நடத்திய பேச்சுக்கள், இரு நாடுகளுக்கு இடையேயான உறவை மேலும் வலுப்படுத்த உத்வேகம் அளிக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*தம்மை விமான நிலையத்தில் வரவேற்று, வழியனுப்பி வைத்த எத்தியோப்பிய பிரதமருக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக கூறியுள்ள திரு. நரேந்திர மோடி, இதுதொடர்பான புகைப்படங்களையும் பகிர்ந்துள்ளார்.*

**>>>>>><<<<<<**

*சாலை விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகளை தடுக்கும் நோக்கில், அதிநவீன வசதிகளுடன் கூடிய ஆம்புலன்ஸ் வாகனங்களை மாநிலங்களுக்கு வழங்க, மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.*

*மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், விபத்து நடந்த பகுதிக்கு 10 நிமிடத்திற்குள் சென்றடையும் வகையில் இந்த ஆம்புலன்ஸ் வாகனங்கள், நவீன வசதிகளை கொண்டிருக்கும் என்று குறிப்பிட்டார்.*

*சாலை கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்ட பின்னரும் கூட, விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகள் தொடர்வதாகவும் திரு. நிதின் கட்கரி தெரிவித்தார்.*

**>>>>>><<<<<<**

ஆதார் அட்டை வைத்திருப்பவர்களின் தரவுகள் கசிவதற்கு வாய்ப்பே இல்லை என்று மத்திய இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், 144 கோடி ஆதார் அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

ஆதார் அடிப்படையில் 16 ஆயிரம் கோடி பரிவர்த்தனைகள் நடைபெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதிநவீன பாதுகாப்பு அம்சங்களைக் கொண்டுள்ளதால், இதன் தரவுகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதாகவும் திரு. ஜிதின் பிரசாதா கூறினார்.

>>>>>><<<<<<

ஜவுளி ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில், நடப்பாண்டில் ஜவுளி ஏற்றுமதி 9 புள்ளி நான்கு சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிகிறது.

>>>>>><<<<<<

கல்வியில் தமிழகம் சிறந்து விளங்குவதாக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி கூறியுள்ளார்.

திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தொடக்கப்பள்ளி இடைநிற்றல் இல்லாத மாநிலமாக தமிழகம் உருவெடுத்துள்ளது என்றும் தெரிவித்தார்.

உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் இடைநிற்றல் 7 புள்ளி ஏழு சதவீதமாக குறைந்துள்ளது என்றும் அவர் கூறினார்.

இதனையும் குறைப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்தார்.

>>>>>><<<<<<

அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு 3 ஆயிரத்து 230 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளதாக தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. சி.வி. கணேசன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில், தமது துறை அலுவலர்களுக்கான பணித் திறனாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

அமைப்பு சாரா தொழிலாளர்களின் கோரிக்கை மனுக்கள் மீது சம்பந்தப்பட்ட நல வாரியங்கள் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அமைச்சர் இக்கூட்டத்தில் வலியுறுத்தினார்.

>>>>>><<<<<<

*அரசியல் மற்றும் பணபலத்தை வைத்துக் கொண்டு, மணல் மற்றும் கனிமவளக் கொள்ளை கும்பல், மாஃபியா போல் செயல்படுவதாக சென்னை உயர்நீதிமன்றம் கூறியுள்ளது.*

*இதுதொடர்பான வழக்கை விசாரணை செய்த நீதிபதிகள் திரு. எஸ்.எம். சுப்பிரமணியம், திரு. குமரப்பன் அமர்வு, மணல் மற்றும் கனிமவளக் கொள்ளை குறித்த புகார் அளிக்கும் சமூக ஆர்வலர்கள் மற்றும் பத்திரிகையாளர்களுக்கு காவல்துறை பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளது.*

*மணல் மற்றும் கனிமவளக் கொள்ளையை தடுப்பது சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களின் பொறுப்பு என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.*

>>>>>><<<<<<

*தேர்தல் அறிக்கை தயாரிப்பதற்காக குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக திமுக அறிவித்துள்ளது.*

*அக்கட்சியின் துணை பொதுச்செயலாளர் திருமதி. கனிமொழி தலைமையிலான இந்தக் குழுவில், 11 பேர் இடம்பெற்றுள்ளனர்.*

*மாநிலம் முழுவதும் பயணம் மேற்கொண்டு, சட்டப்பேரவை தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையை இந்த குழு தயாரிக்கும் என்று திமுக தெரிவித்துள்ளது.*

>>>>>><<<<<<

*பொதுமக்கள் எவ்வித அச்சமும் இன்றி முட்டைகளை வாங்கி, சாப்பிடலாம் என்று தமிழ்நாடு கோழிப்பண்ணையாளர் சங்கத்தலைவர் திரு. சிங்கராஜ் கூறியுள்ளார்.*

*இன்று நாமக்கல்லில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.*

*(வாய்ஸ் பைட் - சிங்கராஜ் 50 செகண்ட்ஸ்)*

>>>>>><<<<<<

*நெல்லை மாவட்டம், களக்காடு அருகே பெருமாள்குளத்தில் உள்ள கோவிலில் கரடி நடமாட்டம் உள்ளது கண்காணிப்பு கேமிரா மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.*

*இதனையடுத்து, கரடியை கூண்டு வைத்து பிடிக்க வேண்டும் என்று பொதுமக்கள் வனத்துறையினருக்கு கோரிக்கை விடுத்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் - திருமலைக்குமார் 40 செகண்ட்ஸ்)*

>>>>>><<<<<<

*தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.*

*எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.*

*(சவுண்ட் பைட் - செந்தாமரைக்கண்ணன் 30 செகண்ட்ஸ்)*

>>>>>><<<<<<

<u>மாவட்டச் செய்திகள்</u>

சேலத்தில், மின்சார சிக்கன வார விழா விழிப்புணர்வு பேரணியை மாநில அமைச்சர் திரு. ராஜேந்திரன் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<<

தூத்துக்குடி மாவட்டத்தில், பிரதமரின் சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை ஆட்சியர் திரு. இளம்பகவத் இன்று ஆய்வு செய்தார்.

>>>>>><<<<<<

திண்டுக்கல் மாவட்டத்தில் எனது இளையபாரதம் அமைப்பின் சார்பில் வருங்கால இளம் தலைவர்களுக்கான பயிற்சி முகாம் இன்று நடைபெற்றது.

>>>>>><<<<<<

திருவண்ணாமலையில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

>>>>>><<<<<<

திருப்பூர் மாவட்டம், திருமூர்த்தி பஞ்சலிங்க அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால், சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

உலக கோப்பை ரோல் பால் சாம்பியன் போட்டியில் இந்தியா ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

துபாயில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியா ஆடவர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் பாகிஸ்தானையும், மகளிர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் போலந்தையும் வென்றது.

>>>>>><<<<<<

*Wroclaw* செஸ் போட்டியின் ஐந்தாவது சுற்று முடிவில் இந்தியாவின் *Ilamparthi* நான்கரை புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

>>>>>><<<<<<

பங்களாதேஷ் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் *Akul Malik*இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் *21-14, 21-16* என்ற செட்கணக்கில் பங்களாதேஷின் *Khandokar Abdus Soad*-ஐ வென்றார்.

*Meiraba Luwang Maisnam, Hemant Gowda, Aditya Tripathi, Atharva Joshi* ஆகியோரும் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>><<<<<<

இந்தியா - தென்னாப்பிரிக்கா இடையோன நான்காவது டிவெண்டி டிவெண்டி கிரிக்கெட் போட்டி லக்னோவில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

>>>>>>END<<<<<<<